**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S HOSUR.**

**Date – 15.07.2026**

**MCOP - 202/2023**

**எ.ம.சா 1 – குஞ்சுமோன்**

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 15 ம் நாள் **குஞ்சுமோன்** என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி. சாந்தி எழுத்தர் நிலை II அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **குஞ்சுமோன்** | தந்தை பெயர் | குஞ்சு |
| வயது | 40 | கிராமம் | கோவிந்த அக்ரஹாரம் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை : –**

நான் எதிர்மனுதாரார் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக வழக்கறிஞர் முன்னிலையில் ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்கு மூலத்தை படித்துக்கேட்டு தெரிந்துகொண்டு கையொப்பம் செய்தேன். அதில் கூறியுள்ள விவரங்கள் சரியானவை. நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் கீழ்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| Ex R1 | Aadhar card of the Respondent – xerox Copy |

**( RW 1 சாட்சியம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி முதல் விசாரணை முடிக்கப்பட்டது. )**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. விபத்து தேதியில், TN 70 B2129 என்ற மொபைல் கிரேன் Rhino 90 என்ற வாகனத்திற்கு காப்பீட்டு சான்று நடப்பில் இருந்தது. அதேபோல் அந்த தேதியில் அந்த வாகனத்தை இயக்கிய ஓட்டுநருக்கு சட்டப்படியான ஓட்டுநர் உரிமம் நடப்பில் இருந்தது. அந்த வாகனத்திற்கு தகுதி சான்றும் நடப்பில் இருந்தது. விபத்து குறித்து முதல் தகவல் அறிக்கை எனது வாகனத்தின் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து , எனது வாகனத்தால் தான் ஏற்பட்டது என்பதால், நானும் 2 ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

மேற்படி, TN 70 B2129 என்ற மொபைல் கிரேன் Rhino 90 என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் விபத்து தேதியில் மெதுவாக தான் இயக்கி சென்றார் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தில் வந்தவர் தான் வாகனத்தை அதிவேகமாக இயக்கி , மேற்படி TN 70 B2129 என்ற மொபைல் கிரேன் Rhino 90 என்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரிதான். விபத்தில் , மேற்படி TN 70 B2129 என்ற மொபைல் கிரேன் Rhino 90 என்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை.

**( RW 1 சாட்சியம் 2 ம் எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur